# PRESS NOTE

## REVENUE INSPECTOR AND PRIVATE INDIVIDUAL ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.8,000/- FOR ISSUING NOC TO GET FREE HOUSE SITE PATTA

The complainant Ashok Kumar, is residing at D.No.1/1151, Rajiv Nagar, Ist Street, Pazhavanchipalayam, Tiuppur South Tk, Tiruppur District. The complainant mother received a free house site from the government in the year 1991. The complainant's mother decided to give the property to his son as dhana settlement. In this regard the complaint had applied NOC to get free house site patta of the above property at Tiruppur South Taluk Office, Tiruppur District. Tr. Nagarajan, Revenue Inspector, Tiruppur South Firka, and Taluk, Tiruppur District had demanded Rs. 8,000/- as bribe for issuing NOC to get free house site patta. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tiruppur Detachment, and preferred a complaint. In this connection a case was registered and a trap was organized today 12.03.2024. During the trap proceedings on the instructions of Tr.Nagarajan, Revenue Inspector, Tr. Tr.Suresh, Private Individual, reiterated his earlier demand and received the bribe amount of Rs.8,000/- from the complainant. Both Accused were arrested.

<u>பத்திரிக்கை செய்தி</u>

**இலவச வீட்டுமனை பட்டா தடையின்மை சான்றுக்கான பரிந்துரைக்காக ரூ.8,000/- லஞ்சமாக கேட்டு பெற்ற திருப்பூர் தெற்கு வருவாய் ஆய்வாளர் மற்றும் அவரது உதவியாளர் திரு.சுரேஷ் கைது.**

புகார்தாரர் திரு.அசோக்குமார், ராஜுநகர் முதல் வீதி, பழவஞ்சிபாளையம், திருப்பூர் தெற்கு தாலுக்காவில் வசித்து வருகிறார். இவர் டெயிலராக வேலை செய்கிறார். இவரது அம்மா பாப்பாத்தி என்பவர் பெயரில் வீரபாண்டி கிராமத்தில் தமிழக அரசால் இலவச வீட்டுமனை பட்டா 1991ம் வருடம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தை தனது மகன் அசோக்குமார் பெயரில் தானசெட்டில்மெண்ட் செய்ய வருவாய் துறையிலிருந்து தடையின்மை சான்று தேவைப்பட்டது. தடையின்மை சான்றுக்காக வருவாய் துறையில் விண்ணப்பம் செய்திருந்த நிலையில் அசோக்குமார் திருப்பூர் தெற்கு வருவாய் ஆய்வாளர் திரு.நாகராஜன், அவர்களை அணுகினார். அப்போது அவர் தடையின்மை சான்றுக்கான பரிந்துரை செய்ய லஞ்சமாக பணம் ரூ.10,000/- கேட்டுள்ளார். அசோக்குமார் தன்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொன்னதின் பேரில் ரூ.10,000/-லிருந்து ரூ.2,000/- குறைத்துக் கொண்டு ரூ.8,000/- கொடுத்தால் தான் பரிந்துரை செய்ய முடியும் என கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் கொடுத்துள்ளார். இப்புகார் மனு சம்மந்தமாக வழக்கு பதிவு செய்து இன்று 12.03.2024ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறி வைப்பு நடவடிக்கையின் போது திருப்பூர் தெற்கு வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் வைத்து, வருவாய் ஆய்வாளர் திரு.நாகராஜன் அறிவுறுத்தலின் பேரில், அவர் தனக்கு உதவியாக வைத்திருந்த சுரேஷ் என்பவர் மூலம் அசோக்குமாரிடமிருந்து லஞ்சமாக பணம் ரூ.8,000/- கேட்டு பெற்ற போது கையும் களவுமாக பிடிப்பட்டார். வருவாய் ஆய்வாளர் நாகராஜன் மற்றும் அவரது உதவியாளர் சுரேஷ் ஆகியோர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையினரால் கைது செய்யப்பட்டார்கள்.